ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி | சமய - சமூக - இலக்கிய வெளியீடு | ஏப்ரல் 2011 | 25/=

உயிர்த்த இயேசு தரும்
அமைதியும் சமாதானமும்
அனைவர் பாலும்
நிறைவதாக!
அல்லேலூயா!
அல்லேலூயா!



மண்ணிடை இயேசு மறுபடி வருவார்
என்பது சத்தியமே!
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே
இயேசுவை நம்புவமே!

- இயேசு காவியம்

# தொண்டன்

**ஏப்ரல் 2011**

**மலர்- 43** **இதழ்- 03**

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
சந்திரசேகரன் சசீதரன்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G.இராஜேந்திரம்
A.S.யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| நம்பிக்கை வாழ்வுதரும் | - | 02 |
| உயிர்ப்பின்... (கவிதை) | - | 04 |
| கிறிஸ்தவ கலை... | - | 05 |
| இன்றைய உலகில்... | - | 06 |
| முப்பது வெள்ளிக்காசுகள் | - | 08 |
| ஆண்டவரின் உடனிருப்பை... | - | 11 |
| ஈழத்தை அளந்த புனிதன் | - | 13 |
| இலக்கிய மஞ்சரி | - | 14 |
| இன்றைய தமிழ்... | - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 18 |
| ஜப்பான் (கவிதை) | - | 20 |
| மாணவர் பக்கம் | : | 21 |
| கடுகுக் கதை | : | 22 |
| மன அழுத்தங்களும் | : | 23 |
| எண்ணிப்பார்க்கையில்... | : | 25 |
| எழுத்தாளர் ஊக்குவிப்பு... | : | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : *25/=*
ஆண்டு சந்தா : *400/=*
(தபாற்செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு.

கிறித்தவ உலகம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து உயிர்த்த பெருவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் காலம். மரணத்தை வென்று இயேசு உயிர்ப்புக்குள் - நிலைவாழ்வுக்குள் நுழைந்தார் என்பது கிறித்தவ விசுவாசம்.

மரணத்திலிருந்து உயிர்ப்புக்குக் கடந்து செல்வது என்பது அடிப்படையில் ஒரு மாற்றம், வளர்ச்சியை நோக்கிய ஒரு மாற்றம். ஆழ்ந்து நோக்கினால் இம்மாற்றம் உலகில் நடந்துகொண்டேயிருக்கிறது; நாளும் பொழுதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. பௌதீக ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இறத்தலும் உயிர்த்தலுமாகிய இம்மாற்றத்தினூடாகவே உயிர்களின், உலகத்தின், இப்பிரபஞ்சத்தின் இருத்தல் சாத்தியமாகிறது. இதன் உறுதிமிக்க சான்றாக கிறிஸ்துவின் உயிர்ப்பு விளங்குகிறது.

இடையறாது நிகழும் இருத்தலுக்கான உயிர்ப்பு என்பது ஒரு போராட்டமாகும். இது வாழ்வின் பல முனைகளிலும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. போராட்டத்தைப் புறந்தள்ளிய ஓர் உயிர்ப்பு இருக்க முடியுமா? 'கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய உயிர் பெறாது' என்று இயேசு கூறிய வார்த்தைகள் இப்போராட்டத்தின் பரிமாணத்தை உள்ளடக்கியதாகும். அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, இன - மொழி - கலாசார - பண்பாட்டு ரீதியாக, உள ரீதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப்போராட்டம் இருத்தலுக்கான - வாழ்வுக்கான அல்லது உயிர்ப்புக்கான ஒரு வழிமுறை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது இழப்புகளையும் அதன் அவசியத்தையும் உள்ளடக்கியது என்பதை கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

இன்று நமது நாட்டுச் சூழல், இனங்களுக்கிடையே நிலவும் முறுகல், பகைமை, சந்தேகம், இராணுவ மேலாதிக்கம், தாளமுடியாத சுமையாக அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு, வறுமை, அதேவேளை சர்வதேச சந்தைப் பொருளாதாரம் வளர்க்கும் நுகர்வுக் கலாசாரம் அதன் விளைவான ஆடம்பர மோகம் முரண்பட்ட இந்நிலைகள் உருவாக்கும் கலாசார மற்றும் ஒழுக்கச் சீரழிவுகள் ஓர் இறத்தலுக்கும் உயிர்த்தலுக்குமான போராட்டத்தின் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதனை நாம் கண்டுகொள்ள இயேசுவின் வாழ்வு, அவரது மரணம் உயிர்ப்பு போன்றவை நமக்குத் திறந்த புத்தகமாகக் காட்சி தருகின்றன. இதனைப் புரிந்துகொண்ட புனித பவுலடியார் 'நாம் நாளும் பாவத்துக்கு இறந்து புண்ணியத்தில் உயிர்க்கவேண்டும்' என்று கூறுவார்.

நாம் எதற்கு இறக்கப்போகிறோம்?
எதற்கு உயிர்க்கப்போகிறோம்?
நாம்தான் முடிவு செய்யவேண்டும்.

**அனைவருக்கும் உயிர்ப்புவிழா வாழ்த்துகள்!**

**- இணை ஆசிரியர்**



## இறைவாக்கு

**"குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாய் இருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார்"** (எபே 2:5)

அருள்தந்தை T.A.ஜுலியன்



# நம்பிக்கை வாழ்வுதரும்

தொடக்கநூலில் படைப்பின் முக்கியக் கூறுகளான விண்ணுலகு, மண்ணுலகு, ஒளி, நீர், நிலம், நிலத்தில் வாழும் தாவரங்கள், நீர்வாழ் உயிரினங்கள், கால்நடைகள், விலங்குகள் ஆகியவற்றை நல்லவையாகப் படைத்தார். இவைகளைப் பேணிக்காக்க மனிதத்தைத் தம் சாயலாகப் படைத்து மிகவும் நல்லதெனக் கண்டார்.

அதே நூலில் பிள்ளைப் பேறு இல்லாத ஆபிரகாமிற்குப் பிள்ளைப்பேறைக் கொடுத்தார். கொடுத்த மகன் ஈசாக்கையே பலி கொடுக்கக் கேட்ட பொழுது எந்தவித சலனமுமின்றி 'சரி' என்று முனைந்தார். ஆபிரகாமின் நம்பிக்கை ஆண்டவருக்கு மிகவும் மகிழ்ச்சி தந்தது. ஆபிரகாமின் சந்ததியை எண்ணற்ற நிலையில் பெருக்குவதாக ஆசீர் வழங்கினார். இது தந்தையாம் இறைவன் தம் மகனாம் இறைவனையே பலிகொடுக்கத் துணிந்த இயல்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

விடுதலைப் பயணத்தில் அடிமை வாழ்வை விடுத்து உரிமை வாழ்விற்குக் கடக்கும் மோசே தலைமையில் இஸ்ராயேல் மக்களை விட்டுச் செல்கின்றார். செங்கடலைப் பிரித்துக் கால் நனையாமல் நடந்து சென்றார். ஆனால் எகிப்தியரின் நிலையோ பிரிந்த நீர் மீண்டும் ஒன்றுசேர யாவரும் மடிந்தனர்.

எசாயா நூலில் கடவுள் அன்புக் கணவராகவும் இஸ்ரயேலரைத் துன்புறும் மனைவியாகவும் உருவகப்படுத்துவதைக் காண்கிறோம். நோவாவின் காலத்து இன்னல்கள் இனிலமுது. இஸ்ரயேலருக்கு ஆண்டவர் தாமே கற்றுத் தருவார். அவர்கள் நிலைவாழ்வு பெறுவர்.

அதே நூலிலுள்ள இன்னொரு வாசகத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு வளமான வாழ்வைக் கொடுக்கின்றார். தனக்குச் செவி சாய்த்தால் வாழ்வது உறுதி. அவரை அவர்கள் தேடவேண்டும். இறையருள் மழையெனப் பொழிந்து அமைதியான வாழ்வைத் தரும் என்கிறார் ஆண்டவர்.

பாருக் நூலில் இஸ்ராயேலரின் துன்பத்திற்கு ஒரு முடிவும் மகிழ்ச்சிக்கு ஓர் ஆரம்பமும் தருவதாக இறைவன் வாக்களிக்கிறார். கடவுளின் ஞானத்தைப் பெற்று அது தரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து நடப்போர் வாழ்வர். கடவுளின் திருவுளத்தை அறிந்துள்ள இஸ்ராயேலர் பேறுபெற்றோர்.

எசேக்கியேல் நூலில் ஆண்டவர் இரக்கம் கொண்டு பிற இனத்தாரின் மத்தியில் தீட்டுப்படுத்திய தம் பெயரைப் புனிதப்படுத்தி அதை நிலைநாட்டுகிறார். சிலைவழிபாட்டை விட்டு ஆண்டவரைத் தொழவேண்டும். கல்லான இதயத்தை இஸ்ராயேலரிடமிருந்து எடுத்துவிட்டு தசையிலான இருதயத்தைப் பொருத்துவார் ஆண்டவர். அவர்களின் கடவுளாக ஆண்டவரும் அவரின் மக்களாக அவர்களும் இருப்பர்.

இயேசு சிலுவையில் இறந்து அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாட்கள் ஆனபின் அவரின் அன்பைப் பெற்ற மகதலா மரியாவும் இன்னொரு


மரியாவும் அவருடைய கல்லறைக்குச் சென்றனர். ஒளியை அணைக்கத் திட்டமிட்டது இருளிலேதான்; இருளை வெற்றிகொள்ள ஒளியாகத் தோன்றியதும் இருளிலேதான். கடவுள் சாவின் மீது தன் ஆற்றலைக் காட்டுகின்றார். சாவும் அதன் பயமும் கடவுளின் திட்டத்திற்கு இசையாதவர்களுக்குத்தான் உண்டு. சென்ற பெண்கள் வெறுமையான கல்லறையைக் கண்டார்கள். யோவானின் கண்ணோட்டத்தில் 'காணுதல்' நம்பிக்கை தரும் எதார்த்தம். இங்கே வெற்றுக் கல்லறையைக் கண்டார்கள். இயேசு உயிர்த்ததை நம்பினார்கள். இயேசுவின் உயிர்ப்பு மீண்டும் சாவதற்கான உயிர்ப்பல்ல. நயீன் நகரத்து கைம்பெண்ணின் மகளை உயிர்ப்பித்தார். ஆனால் அவள் ஒருநாள் மடியத்தான் வேண்டும். மத்தேயுவின் பார்வையிலும் காண்பது ஊனக்கண் கொண்டல்ல. மாறாக நம்பிக்கைக் கண் கொண்டு. பேறுபலன்களில் இயேசு, 'தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவ'ர்கள் கடவுளைக் காண்பர்' (மத் 5:8) என்று கூறுகிறார். நம்பிக்கையோடு பார்க்க நம்பிக்கை கொண்டோரினால் மட்டுமே இயலும். புனித தோமா உயிர்த்த இயேசுவைக் கண்டால்தான் நம்புவதாகக் கூறினார். இயேசு தோன்றி அவரைக் காணச் சொன்னார். கண்டார், நம்பிக்கை கொண்டார் (யோவா 20:24-25).

கிறிஸ்துவோடு இறப்பவர்கள் அவரோடு உயிர்ப்பது உறுதி. ஏனெனில் திருமுழுக்கினால் அவரோடு இணைந்து அவரது இயல்பைக் கொண்டுள்ளோம் (பிலி 2:5). கிறிஸ்துவோடு இறப்பவர்கள் அவரோடு வாழ்வதும் நிச்சயம். உயிர்த்தவர் அழைக்கின்றார். உலகிற்கு இறந்து இறையரசில் உயிர்த்து வாழ இயேசு அழைக்கின்றார். அந்த அழைப்பே அவரது உயிர்ப்பு.

## செயற்கை இருதயம் பொருத்தி அமெரிக்க மருத்துவர்கள் சாதனை



உலகிலேயே முதன்முறையாக அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் செயற்கை இருதயம் பொருத்தி சாதனை படைத்துள்ளனர். டெக்சாஸ் இருதய நோய் மருத்துவ நிறுவனத்தில் 55 வயதான கிரேக் லெவிஸ் என்பவர் நோயாளியாகச் சேர்ந்தார். அவருடைய இருதயம் முற்றிலுமாகச் செயலிழந்த நிலையில் இருந்தது. எனவே அவருக்கு செயற்கை இருதயம் பொருத்த முடிவு செய்யப்பட்டு வெற்றிகரமாக அறுவவைச் சிகிச்சை நடந்தது. இந்த அறுவைச் சிகிச்சையை டாக்டர் பட் பிரேசியர், டாக்டர் பில்லி சான் ஆகிய இருவரும் செய்து சாதனை படைத்தனர்.



## குறும்(புப்)பா - 59

கல்மூடி இல்லைகல் லறையில்
சொல்லிமனம் மருண்டன துயரில்
கல்லான மனம்புரண்டால் கண்டிடலாம் இயேசுவையுள்
வில்லேந்து நேர்குறியில் நில்!

– மலர் –

# உயிர்ப்பின் உன்னதம்

ச.சசீதரன்



வானத் திரைகள் கிழிபட
வாக்குத்தத்தம் மெய்ப்பட
ஞானப்பொருளின் புலர்வென
ஞாயிற்றொளியின் திரள்என...

மரணம் முடிவு எனும்
மரபினை உடைத்து
மனுமகன் படைத்திட்ட
புதுமையின் புதுமை நிகழ்ந்தது...!

சிலுவைக்குள்
அடங்காத நியாயத்தின்
நிலுவை
நிமிர்வுற்றது...!

ஆவியின் அற்புதம்
அகிலத்தை (இ)ரட்சித்து
இயேசுவின் புனித
(இ)ரத்தம் எழுதிய புதுமைக்கதை!

கல்லறையின் திறந்த கதவின்
வழியாக
வாழ்வின் நம்பிக்கை பகிரப்பட்டது...

நாமும்
அஞ்ஞானத்திலிருந்து
அகங்காரத்திலிருந்து
நிர்மூடத்திலிருந்து
மீண்டெழுந்து
உயிர்ப்படைவோம்!
உயிர்ப்பின் உன்னதத்தை
உணர்வோடு
பகிர்ந்துகொள்வோம்...!

# கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை



கிழக்குப் பிரதேசத்தில் கலை இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துதையும் மேலும் அதனை அபிவிருத்தி செய்வதையும் நோக்காகக் கொண்டு 'கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை' என்னும் ஓர் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுகிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேருள்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரும் 'மன்னா' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான அருள்தந்தை தமிழ்நேசன் அடிகளார் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இலக்கியம், எழுத்தாளர் பணி, தமிழ் மொழியின் சிறப்பு, கிறிஸ்தவர்கள் தமிழுக்காற்றிய தொண்டு, கிறிஸ்தவ இலக்கியங்கள், எதிர்காலத் திட்டங்கள் என பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவான உரையொன்றை நிகழ்த்தி அனைவரையும் கவர்ந்துகொண்டார்.

இதற்குமுன், இத்தகைய அமைப்பொன்றை நிறுவவேண்டும் எனத் திட்டமிட்ட சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருள்தந்தை றொஹான் பேணாட் அவர்கள் 'கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை' ஆரம்பிக்கப்படுவதன் நோக்கத்தையும் எதிர்காலத்தில் அதன் செயல்திட்டங்களையும் விளக்கினார்.

ஆயர் அவர்கள் தமதுரையில் இதனை நல்லதொரு முயற்சி எனப் பாராட்டியதோடு, இலக்கியங்களூடாகக் கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதில் அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருள்தந்தை A.A.நவரெட்ணம் அவர்கள் உரை ஆற்றுகையில்

மறைபரப்ப வந்த மேனாட்டு மறைபரப்பாளர்கள் தமிழ் மொழியின்பால் விருப்புற்று தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றினர்; தமிழர்களும் தமிழுக்குச் செய்யாத பணிகளை அவர்கள் தமிழுக்குச் செய்தனர் என்று கூறியதோடு கலை இலக்கியங்கள் வழியாக கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்படுவதை திருச்சபை வரவேற்பதாகவும் 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளை ஆதாரங் காட்டி விளக்கினார்.



தொடர்ந்து கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவைக்குத் தலைவராக அருள்தந்தை றொஹான் பேணாட் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். பத்து அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. வருங்காலங்களில் நிர்வாகக் குழு ஒன்றுகூடி இவ்வமைப்புக்கான யாப்பு ஒன்றை உருவாக்கவும் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு குழுவை அமைக்கவும் கலைஞர்களின் விபரக் கோவை ஒன்றைத் திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.

பேரவை அமைப்பதற்காக மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை மாவட்ட கத்தோலிக்க கிறிஸ்தவ சபைகள், கலைஞர்கள் அனைவருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டபோதும் ஏறத்தாள 35 பேரளவிலேயே கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரருட்தந்தை பொன்னையா யோசப் ஆண்டகை



## இறையரசா? திருச்சபையா?



# இன்றைய உலகில் திருச்சபையைப் புரிந்துகொள்வது எங்ஙனம்?

திருச்சபையைப் புரிந்துகொள்வதற்கு நம் சிந்தனையில் எழும் வினாக்கள்: 'இயேசு துவக்கி வைத்தது இறையரசா? அல்லது திருச்சபையா? இரண்டுக்கும் உள்ள தொடர்பு என்ன? திருச்சபையை விளக்குவது இறையரசா? அல்லது இறையரசை விளக்குவது திருச்சபையா? இறையரசு உலகில் இருப்பதற்குத் திருச்சபை தேவையா? திருச்சபையைப் புரிந்துகொள்வதற்கு இறையரசு தேவையா? இயேசுவின் முக்கிய போதனை இறையரசு எனின், அவர் போதித்த இறையரசுக்கும் திட்டமிட்ட திருச்சபைக்கும் உள்ள தொடர்பு என்ன?' இவை போன்ற வினாக்களுக்கு விடை தேடும்போது எமது சந்தேகங்கள் மறைந்துவிடும்.

இயேசுவின் போதனையில் 'இறையரசும்' 'திருச்சபையும்' அருகருகே வரும் விவிலியப் பகுதி மத் 16: 18-19 ஆகும். "உன் பெயர் பேதுரு (பாறை); இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்.... விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்".



'திருச்சபை' என்ற வார்த்தையை இயேசு இரண்டு தடவைதான் (காண். மத் 16:18, 18:17) சொல்லியிருக்கிறார். ஆனால் 'இறையரசு' என்ற வார்த்தையை 92 தடவை சொல்லியிருக்கிறார். தொடக்க காலத் திருச்சபையோ அதற்கு எதிர்மாறாக மொத்தம் 110 தடவை 'திருச்சபை' என்ற சொல்லை புதிய ஏற்பாட்டு நூல்களில் பயன்படுத்தியிருக்கின்றது. இயேசு மொத்தம் இருதடவை மாத்திரம் திருச்சபை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதிலிருந்து நாம் புரிந்துகொள்ளவேண்டிய செய்தி எதுவெனில் இயேசுவின் முக்கிய போதனை விண்ணரசு பற்றியதாகவே அமைந்திருந்தது என்பதாகும். ஆனால் 'திருச்சபை' என்ற சொல் இயேசுவின் போதனையில் வராவிட்டாலும் 'மெசியா சமூகம்' என்ற கருத்துரு இயேசுவின் இறையரசு பற்றிய போதனையில் ஒன்றரக் கலந்திருப்பதை அவதானிக்கலாம்.

இறையரசும் திருச்சபையும் புதிய

ஏற்பாட்டின் அடிப்படைக் கருத்துகளாகும். மனுக்குலத்திற்கான கடவுளின் திட்டத்தை அறிந்துகொள்ள இரண்டும் அவசியம். இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. இயேசுவின் இலக்கு, அவர் கண்ட கனா, அவரது பார்வை இறையரசைப் பற்றியதாகும். அவரது இலக்கை சீடர் குழுவிடம் ஒப்படைத்தார். இயேசுவின் இறையரசுப் பார்வையை அவர் வழிவந்த சீடர்கள் மூலம், நாம் பிறக்கின்ற சமூகத்தில், திருச்சபையில் பெற்றுக்கொள்கிறோம். இத்திருச்சபை என்ற சமூகம் இறையரசுப் பார்வையைத் தனக்கேயுரிய வகையில் சட்டத்துக்குள் வரையறுத்து, அதனை எமக்குத் தந்துள்ளது. இவ்விதமாக திருச்சபை சமூகம் என்ற நீண்டகால பாரம்பரியத்துக்குள் புரிந்து கொள்ளப்பட்டுவந்த இறையரசுப் பார்வையை நாம் இன்று பெற்றுள்ளோம்.

இன்றைய இறையியல் திருச்சபையின் உண்மையான பண்புகளையும் பணிகளையும் விளக்கக் கையாளும் மற்றுமொரு உருவகந்தான் இறையரசு இயக்கமாகும். இந்தப் பார்வை முற்றிலும் புதியது அன்று. இரண்டாம் வத்திக்கான் சங்கம் 'திருச்சபை' எனும் ஏட்டின் 7ம் அதிகாரத்தில் பயணத் திருச்சபை பற்றிப் பேசுகிறது. இது ஓரளவு திருச்சபையின் இயக்கத் தன்மையையே உணர்த்துகிறது. 'இன்றைய உலகில் திருச்சபை' எனும் ஏட்டின் அடியோட்டமாக இருப்பதும் திருச்சபை இறையரசு இரக்கம் எனும் பார்வையே.



இயேசுவின் இயக்கத்தின் இலட்சியம் இறையரசே. இயேசுவின் இறையரசு தனிமனிதரை மட்டும் அன்று, சமூகத்தையும் சார்ந்தது. இறையரசு எனும் சொல்லில் உள்ள அரசு எனும் பகுதி இதையே உணர்த்துகிறது. இயேசு போதித்த கடவுள் வாழ்வின் கடவுள். அவர் சாவின் சக்திகளை ஒருபோதும் சகித்துக்கொள்பவர் அல்ல. மனிதர் வாழவேண்டும், வளரவேண்டும், நிறைவு காணவேண்டும் என்பதே அவரது ஏக்கம். எனவே, மனிதரது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பகையானவை எல்லாம் அவருக்கும் பகையானவையே. ஆதிக்கம் செலுத்துவோருக்கும், அடக்கி ஆள்வோருக்கும் எதிராக நின்று அனாதைகளுக்கும், அநீதிக்கு ஆளானோருக்கும் ஆதரவாய்ப் போராடுபவர் அவர்.

இயேசு போதித்த இறையரசு உள்ளத்தை மட்டுமன்று, உடல், உலகம் அனைத்தையும் சார்ந்தது. அது வெறும் ஆன்மீக அமைப்பு மட்டுமன்று. முழு மனித இயல்பையும் சார்ந்தது. அக-புற, சமய-உலகக் காரியங்கள் அனைத்துக்கும் உரியது. ஆன்மீகக் காரியங்கள் வேறு, உலகக் காரியங்கள் வேறு; இறைவனைச் சார்ந்தவை வேறு, மனிதனைச் சார்ந்தவை வேறு எனும் பிளவு அதில் இல்லை. மாறாக அதில் உலகைச் சார்ந்தவை எல்லாம் ஆன்மாவையும் சார்ந்தவையே. மனிதனைச் சார்ந்தவை எல்லாம் இறைவனையும் சார்ந்தவையே.

இயேசு கண்ட இறையரசு இம்மையில் தொடங்கி மறுமையில் நிறைவு காண்கிறது. "இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே! எனச் சொல்லமுடியாது. ஏனெனில் இறையரசு உங்கள் நடுவேயே செயல்படுகிறது" (லூக் 17:21) என அவர் கூறுகிறார். குழந்தைகள் மகிழும்போது, ஏழைகள் சிரிக்கும்போது, பகைமை மறையும்போது, பகிர்வு வளரும்போது, சகோதர ஒன்றிப்பும் சம உரிமை முயற்சிகளும் பெருகும்போது, நீதி நிலைக்கும்போது இந்த மண்ணில் அரும்புவதே இறையரசு.

இத்தகைய இறையரசு இயக்கமாக, அதாவது இறையரசின் அடையாளமும் கருவியுமாக வாழவும் செயல்படவுமே திருச்சபை இன்று தனிச்சிறப்பாக ஆவியால் அழைக்கப்படுகிறது.

- தொடரும் -



# முப்பது வெள்ளிக்காசுகள்

வரலாற்றுச் சிறுகதை

பலஸ்தீன தேசம் உரோமைப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம் அது (கி.பி. 27-30). எருசலேம் அந்தத் தேசத்தின் எழில்மிகு நகரம். மன்னன் தாவீதும் அவன் மைந்தன் சலமோன் ஞானியும் மணிமுடி சூடி ஆட்சி செய்த அந்த மாபெரும் நகரம் பாஸ்கா எனும் புளிப்பற்ற அப்ப விழாவுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறது.
ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இந்த அற்புதமான விழாவைக் கண்டுகளிக்க மக்கள் வெள்ளம் அலைமோதுகின்றது.

விழாவிலும் வேடிக்கைச் சம்பவங்களிலும் மக்கள் திளைத்துக்கொண்டிருந்த அதேநேரம் எருசலேமின் ஒரு பகுதியில் அமைந்திருந்த தலைமைக்குரு கைப்பாசின் மாளிகையில் மூப்பர்களும் மறைநூல் அறிஞர்களும் ஒன்றுகூடுகின்றார்கள். தீவிரமாக ஆலோசனைகளில் ஆழ்ந்திருக்கும் அவர்களின் முகங்களில் தீப்பற்றி எரிவதுபோல வெறுப்பும் வெறித்தனமும் கோரத்தாண்டவம் புரிகின்றன. அவர்களின் இந்த மன உணர்வைப்போல மாளிகையில் இடம்பெறும் உரையாடல்களிலும் விஷம் கொப்பளிக்கின்றது.

ஏழைத்தச்சன் சூசையின் மகன் தன்னை - இறைமகன் என்று சொல்கிறான்... இது அப்பட்டமான தேவதூஷனம்... -

இது மட்டுமல்ல.... இறந்து மூன்று நாளில் உயிர்த்தெழுவேன் என்று பிரசங்கம் செய்கின்றான்... மக்கள் முழுமடையர்கள் என்றா இந்த நாசரேத்தூரான் நினைக்கின்றான்?

நமக்கும் நமது அதிகார பீடத்திற்கும் இவன்தான் பெரிய சவால்... இந்தச் சவாலைச் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது.....

நமக்கு எதிராக மட்டுமல்ல, உரோமைப் பேரரசிற்கும் எதிராகப் புரட்சிகளை ஊக்குவிக்கின்றான்.....

இனியும் இவனை விட்டுவைக்கக் கூடாது... இந்தப் பாஸ்கா விழாவின்போதே இயேசு எனும் இந்த மகாபொய்யனைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டும். அதுதான் சரி....

முடிவை அங்கு குழுமியிருந்த அனைவரும் ஏற்றுக்கொள்வதைக் காட்டும் விதத்தில் அந்த மாளிகையே அதிரும் வண்ணம் சிரிப்பொலி எழுகின்றது. அதைத் தொடர்ந்து சதியாலோசனைச் சபை கலைகின்றது.

எருசலேம் நகரின் ஒரு பகுதியில் இந்தச் சூதர்கள் சூழ்ச்சிவலை பின்னிக்கொண்டிருக்கையில் நகரிலிருந்து சற்றுத் தொலைவில் சீயோன் குன்றில் அமைந்துள்ள சேநாக்குளும் எனும் இடத்தில் இயேசுவும் சீடர்களும் ஒன்றாக அமர்ந்திருக்கின்றனர்.

இயேசுவின் செங்கமல முகத்தில் என்றும் இல்லாதவாறு கலவர இருள் கவிந்திருக்கின்றது. மூன்று ஆண்டுகளாகத் தன்னை முன் பின்னாகத் தொடர்ந்த சீடர்களை விட்டுப் பிரியும் வேளை நெருங்கிவிட்டதை உணர்ந்த இயேசுவின் மனித சுபாவம் பெரும் கலக்கமும் குழப்பமும் அடைவதை அவரது சீடர்கள் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தமக்குள்ளே யார் பெரியவர் என்ற தர்க்கத்தில் இறங்குகின்றனர்.



இனிய மாலைப்பூ இதழ் விரிக்கும் நேரம். எருசலேமுக்குக் கிழக்கில் உள்ள ஒலிவ மலையில் பிறந்து அதன் அருகில் சலசலத்தோடும் அருவியில் விழுந்து விளையாடும் மலைக்காற்று சீயோன் குன்று எங்கும் மெல்லென வீசுகின்றது. காற்றின் ஸ்பரிசத்தில் சீடர்கள் மெய்மறந்து போகின்றனர்.

சீடர்களின் பலவீனத்தை நன்கு தெரிந்துகொண்ட இயேசு தமது இறுதி இரவு உணவை நிறைவு செய்யும் பொருட்டு அப்பத்தைக் கையிலெடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பகிர்ந்து தன் சீடர்களுக்குக் கொடுத்து 'இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல்... என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்...' என்று வேண்டுகிறார். அது போன்றே கிண்ணத்தை எடுத்து 'இதில் உள்ளதை அனைவரும் அருந்துங்கள்... ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்...' என்றார்.

இயேசுவின் இறுதி இரவுணவு முடிவடையும் வேளை...... அவரின் பார்வை சீடர்களில் ஒருவனை ஊடுருவுகின்றது. பார்வையின் தாட்சணியத்தைத் தாங்கிக் கொள்ள இயலாத அந்தச் சீடன் யூதாஸ்காரியோத்தின் தலை கவிழ்கிறது. அதைக் கவனித்த இயேசு அமைதியாகச் சொல்கின்றார்.

இன்று உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்....

இயேசுவின் வார்த்தை அங்கிருந்த சீடர்களின் இருதயங்களில் ஈட்டியாகப் பாய்கின்றது. நிலைமையைப் புரிந்துகொண்ட யூதாஸ் தந்திரமாக அவ்விடத்தை விட்டு நழுவுகின்றான். இயேசுவிடமிருந்து விரக்தி தோய்ந்த புன்னகை ஒன்று வெளிவருகிறது.

எருசலேமில் கெதரோன் அருவியின் குளிர்ச்சியைச் சுகித்தபடி எழுந்து நிற்கிறது ஒலிவமலை. ஓங்கி வளர்ந்து நிற்கும் ஒலிவ மரங்களால் சூழப்பட்ட அம்மலையின் ஒரு பக்கம் யூதேயா பாலைவனமும் இன்னும் ஒரு பக்கம் யோர்தான் பள்ளத்தாக்கும் மோவாப் மலைத் தொடர்களும் இந்தச் சூழலின் அழகை இன்னும் அதிகமாக்குகின்றன.

எருசலேமுக்கு வரும்போதெல்லாம் இந்த இயற்கைக் காட்சியில் கிறங்கிப்போகும் இயேசு பகலெல்லாம் ஆலயத்தில் போதித்துவிட்டு இரவுப் பொழுதை அமைதியாகக் கழிக்க ஒலிவமலைக்குப் போய்விடுவார். ஆனால் இன்று அந்த மனநிலையில் அவர் இல்லை என்று தெரிகிறது.

இறுதி இரவு உணவை நிறைவு

செய்துகொண்ட இயேசுவும் சீடர்களும் இறைவனுக்கு நன்றி கூறி புகழ்கீதம் இசைத்ததும் ஒலிவமலையை நோக்கிப் புறப்படுகின்றனர். இயேசுவின் மனம் உண்மையில் தளர்ந்து போகின்றது.

அது ஒரு அழகிய நிலாக்காலம். ஒலிவ மலையும் சூழவுள்ள மரஞ் செடி கொடிகளும் வெள்ளி ஆபரணம் பூண்டு ஒளி வீசுகின்றன. பகல் போன்ற இந்த வெளிச்சத்தில் மலைக்காற்று தன் விருப்பம் போல் எங்கும் ஏறி விளையாடித் திரிகின்றது. இவ்வியற்கை இன்பத்தை ஏறெடுத்துப் பார்க்காத இயேசு ஒலிவத் தோப்பில் ஒரு பாறையின் ஓரமாக முழந்தாள் இட்டு தந்தையை நோக்கி மனங் கசிந்து பிரார்த்திக்கின்றார்.... அவர் மனக்கண்முன் இந்த உலகம்.... அதன் வஞ்சகம்.... பொறாமை.... ஏமாற்று.... அத்தனையும் ஒன்றுதிரண்டு அவரைப் பயமுறுத்துகின்றன. அதனாலோ என்னமோ அவர் உடல் எல்லாம் அந்த இரவில் வியர்த்துக்கொட்டுகிறது. வாதை தாங்க முடியாது இயேசு வாய்விட்டரற்றுகின்றார்.

என் தந்தையே... முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும்.... ஆனாலும் என் விருப்பப்படி அல்ல... உன் விருப்பப்படி நிகழட்டும்....

ஒலிவத்தோப்பில் இயேசு ஒரு பெரும் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கையில் அவரது சீடர்களில் ஒருவன் யூதாஸ்காரியோத் அவருக்கெதிராக பெரியகுரு கைப்பாஸ், மூப்பர்களோடு அமர்ந்து சதியாலோசனையில் ஈடுபடுகின்றான். அந்த ஆலோசனையின்போது யூதாஸ் எடுத்த எடுப்பிலேயே கேட்கின்றான்.

இயேசுவை நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?

யூதாசின் இந்தக் கேள்விக்கு கைப்பாசிடமிருந்து பட்டெனப் பதில் வருகிறது.

முப்பது வெள்ளிக்காசுகள்.....!

காசு கை மாறுகிறது. யூதாசின் முகம் குரூரமாகச் சிவக்கின்றது. அதைக் கண்ணுற்ற பெரியகுரு கைப்பாஸ் அட்டகாசமாகச் சிரிக்கின்றான். அந்தச் சிரிப்பில் அவனது ஆணவம், குரோதம், கொலைவெறி அத்தனையும் நன்றாகவே பளிச்சிடுகின்றன. அதற்குள் குருக்கள், மூப்பர்களோடு ஒரு பெரும் கும்பலும் கூடிவிடுகிறது. அவர்களின் கைகளில் கத்தி, பொல்லுகள், வாள்கள் அந்த நிலவு வெளிச்சத்தில் நன்றாகவே தெரிகின்றன.

உறுதியான தீர்மானத்தோடு யூதாஸ் காலடி எடுத்து வைக்கிறான். அவனை அந்தக் கும்பல் பின்தொடர்கிறது.

ஒலிவத் தோப்பில் களைத்துச் சோர்ந்து முகங் குப்புற விழுந்து கிடக்கும் இயேசுவுக்கு எல்லாம் புரிகிறது. பக்கத்தில் நின்ற தமது சீடர்களிடம் பக்குவமாகச் சொல்கிறார். எழுந்திருங்கள் போவோம். என்னைக் காட்டிக் கொடுப்பவன் இதோ நெருங்கி வந்துகொண்டிருக்கிறான்.

ஆம்... இயேசு தமது சிலுவைப் பயணத்திற்கு ஆயத்தமாகிறார்.

**- வாகரைவாணன் -**



## குறும்(புப்)பா - 60

அங்காடி சென்றாள்நம் ஆச்சி
அவசரமாய்ப் பகல்நாழி யாச்சி
இங்கேதா இதுகொஞ்சம் அதுகொஞ்சம் அவ்வளவே
நங்காசு காகிதமாய்ப் போச்சி

– மலர் –

அருள்தந்தை தமிழ்நேசன் அடிகள்



# ஆண்டவரின் உடனிருப்பை, பாதுகாப்பை உணர்ந்திடுவோம்

ஒன்று கடந்தவர், மற்றொன்று கலந்தவர். கடவுள் என்றாலே கடந்தவர் என்றுதான் நினைக்கின்றோம். இது பழைய சித்தாந்தம். ஆனால் தற்கால இறையியலின்படி கடவுள் என்றால் கடந்து நிற்பவர் மட்டுமல்ல, கலந்து நிற்பவரும் ஆவார். மக்கள் துன்பப்படும்போது, தேவையில் துடிக்கும்போது, அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கும்போது நம்மோடு கலந்துவிடுகின்றார். ஆம்! நம் கடவுள் கடந்தவர் மட்டுமல்ல நம்மில் கலந்தவரும் ஆவார். அவரே இம்மானுவேல் என்று அழைக்கப்படுகின்ற 'நம்மோடு வாழும் கடவுள்'.

நற்செய்தியாளர் யோவான் நம்மோடு கலந்த கடவுளை நமக்கு இப்படிக் காட்டுகின்றார். "வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்"

நிழலாக நம்மைத் தொடர்பவர் ஆண்டவர். அதனால்தான் திருப்பாடலின் ஆசிரியர், 'உமது பிரசன்னத்தைவிட்டு நான் எங்கே செல்லக்கூடும்?' என வினவுகின்றார்.

மத்தேயு 18:20ல் இயேசு கூறுகின்றார், "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்"

யோசுவா 1:9 "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் நீ செல்லும் இடமெல்லாம் உன்னோடு இருப்பேன்"

எசாயா 41:10 "அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள்.

உடனிருத்தல் உன்னதமான ஒரு அனுபவம்! உற்சாகம் தரும் அனுபவம். சேயின் அருகில் தாய் இருப்பது குழந்தைக்குப் பாதுகாப்பு உணர்வைத் தருகின்றது.

நோயாளரை, வயோதிபரை, சிறைப்பட்டவர்களைச் சென்று சந்திப்பது — அவர்களோடு உடனிருப்பது அவர்களுக்கு ஆறுதலை, அக்கறையை, கரிசனையை வழங்கும் அனுபவமாக இருக்கின்றது. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், நண்பன் நண்பி, காதலன் காதலி இவர்கள் ஒருவருக்கு ஒருவர் அருகில் இருப்பது அற்புதமான, ஆறுதலான இனிய அனுபவமாகும்.

மனிதர்களின் உடனிருப்பு இத்தனை மகிழ்வையும் நிறைவையும் தருகின்றதென்றால் நம்மைப் படைத்த இறைவனின் உடனிருப்பு நமக்கு எத்தகைய உற்சாகத்தை, மகிழ்ச்சியைத் தரவேண்டும்?

கடவுள் இரண்டு தன்மைகளைக் கொண்டவர் என தத்துவம் நமக்கு விளக்குகிறது.



# செந்நீரால் கழுவு...

இறையே!
நெஞ்சில் நிறைந்து வாழ்பவரே!
எம் நெஞ்சை ஊடறுத்துப் பார்க்க அருள்தா!
பாவக்கறைகள் அத்தனையும்
பஞ்சாகப் பறந்தோடட்டும்
உன் கல்வாரிக் குருதியில்

இறையே!
மரத்தைப் பற்றிக்கொண்ட குருவிச்சை
மரத்தைக் கெடுக்கும்
எம்மைப் பற்றிக்கொண்ட பாவம்
எம்மைச் சிதைக்கும் - இதனை
எம் நெஞ்சில் உறைக்கப்பண்ணு

இறையே!
பழமரம் நாடிச் செல்லும்
பறவை இனம் போல்
பறந்து வந்தோம் - உன்
பாதச்சுவடு தேடி வந்தோம் - எம்
பாவக்கறை கழுவ வந்தோம்

இறையே!
பாசி படிந்த நிலம்போல் - எம்
நெஞ்சில் பாவம் படிந்துள்ளது
தொடர் மலைக்குன்று போல் - எம்
நெஞ்சில் பாவம் வளர்ந்துள்ளது
எம்மைக் கழுவு - உன்
செந்நீரால் கழுவு
வெண்பஞ்சென எம் நெஞ்சம்
மாறிடக் கழுவு!

- ரா. பாக்செல்வி -

மீட்டுக்கொண்டேன்; உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்; நீ எனக்கு உரியவன். நீர் நிலைகள் வழியாகச் செல்லும்போது நான் உன்னோடு இருப்பேன். ஆறுகளைக் கடந்து போகும்போது அவை உன்னை மூழ்கடிக்க மாட்டா; தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்பட மாட்டாய். நெருப்பு உன்மேல் பற்றியெரியாது. ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவர் நானே. என் பார்வையில் நீ விலையேறப்பெற்றவன்; மதிப்பு மிக்கவன். நான் உன்மேல் அன்பு கூர்கிறேன். ஆதலால் உனக்குப் பதிலாக மானிடரையும் உன் உயிருக்கு மாற்றாக மக்களினங்களையும் கொடுக்கிறேன். அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன்"

நீர் நிலைகள் வழியாகச் செல்வது, ஆறுகளைக் கடந்து போவது என்றால் என்ன? தீயில் நடப்பதென்பது என்ன?

நமது வாழ்க்கைப் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் பெரிய நீர் நிலையாக நம்முன் நின்றாலும், ஆறுகளாகிய துன்பங்களை நாம் கடந்துசெல்ல வேண்டி இருந்தாலும் நமது வாழ்க்கைப் பிரச்சினைகள் பெரிய நெருப்பாக நமக்கு முன்னே எரிந்துகொண்டிருந்தாலும் அந்த நெருப்பைக் கடந்துசெல்ல வேண்டி இருந்தாலும் ஆண்டவர் என்ன சொல்கிறார்? "அஞ்சாதே, பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்"

நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன் என்கிறார் ஆண்டவர்" ஏசாயா 42: 1-5 "யாக்கோபே, உன்னைப் படைத்தவரும் இஸ்ராயலே, உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் இப்போது இவ்வாறு கூறுகிறார். அஞ்சாதே, நான் உன்னை

அஞ்சாதே, பயப்படாதே என்ற இந்த வார்த்தை திருவிவிலியம் முழுவதும் 548 தடவைகள் மீண்டும் மீண்டும் வருவதாக விவிலிய அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நம்மோடு இருக்கும் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்வோம். அவருடைய அன்பிலே வளர்வோம்!

# ஈழத்தை அளந்த புனிதன்
## (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



## 18

### செண்பகக்குழல்வாய்மொழி

(வேறு)

**உயிர் கொடுத்த முதற் சீடன்**

மன்னனோ விமலதர்மன்
மற்றெலாச் சமயத்தார்க்கும்
பண்ணிய சேவைதன்னைப்
பட்டிய லிடலாம்ஒண்ணா
மன்னுயிர் வாழ்ந்திடத்தன்
மட்டிலா உயிரையீந்த
அன்னவர் தந்தவேதம்
அதற்கவன் புரிந்தசேவை

காய்ந்துபோய்க் கிடந்தஅந்தக்
கண்டிமா நகரின்மீது
பெய்தவான் மழையைமன்னன்
பொழுதினில் மறப்பனாமோ - இல்லை
ஊரெலாம் பரவிமக்கள்
உயிர்தனைக் குடித்தஅம்மை
வேரொடு சாய்த்தயோசப்
வாஸ்பணி மறப்பனாமோ

நன்றியில் திளைத்துஎன்றும்
நலமுடன் கிறீஸ்துவேதம்
மண்ணில் வேரூன்றத்தன்னா
லானதைச் செய்துவித்த
தன்னிக ரில்லாஅந்தத்
தலைநக ராண்டமன்னன்
அந்நியன் யோசேப்வாஸ்க்கு
அட்சய பாத்திரந்தான்

இவையெலாம் நிகழ்ந்தகாலை
இருபெருஞ் சக்தியாகக்
கவையென ஈழமெங்கும்
பரப்பியே வேதந்தன்னை
சுவையுறு பணிகள்செய்த
யோசேப்வாஸ் கர்வாலோவை
அவைதனுக் கழைத்துமன்னன்
ஆங்கொரு பணியளித்தான்

மன்னனோ போர்த்துக்கேய
மருத்துவ முறையனைத்தும்
தன்மொழி தனிலேயாக்கித்
தரவென 'இருவர்தம்மை
அன்புடன் கேட்டுவைக்க
அதற்கிரு முனிவர்தாமும்
சம்மதஞ் சொல்லிப்பின்னர்
தொடங்கினார் மொழிபெயர்ப்பை

அதற்கென இருவர்தாமும்
அரண்மனை சென்றுமீள
ரதமதைக் கொடுத்தும்வாசோ
நடைதமக் குகந்ததென்று
பகலெலாஞ் சென்றுஏட்டில்
மொழிதனைப் பெயர்த்தெடுத்து
தகவுறு நூலையாக்கித்
தந்தனர் மன்னன்கையில்

இடைக்கிடை கர்வாலோதன்
இயல்பினை யற்றுப்பாயில்
கிடையெனக் கிடக்கவேதன்
உடையினில் கண்டமன்னன்
தடையெது மின்றிஅன்னார்
சுகம்பெற மருத்துவத்தின்
படைதனி யமைத்துப்பார்த்தும்
பலனது இன்றித்தோற்றான்

விடையது பெற்றுநேரே
விண்ணகஞ் சென்றஙகள்
நடையது தளராநோன்பின்
நாயகன் ஞானமேய்ப்பன்
அடலுறு கர்வலோவை
ஆங்கெனக் காணவேண்டி
படையெனத் திரண்டுவந்து
பதைத்தநற் பக்தர்கோடி

இடியெனச் செய்திகேட்டு
இன்னலு முற்றமன்னன்
நெடுதுயர் செய்தியொன்றும்
நிம்மதிக் கனுப்பிவைத்தார்
உடலதை உற்றகோவில்
நிலமதில் அடக்கவேண்டி
முடிவினைச் சொல்லிவைத்தான்
முனிவரோ சொல்லிழந்தார்

இதுவரை மரணமெய்த
எவரது உடலுமிந்த
விதமென நகரினுள்ளே
விதையுற வில்லையுண்மை
புதுமைபோ லானஇந்தப்
பெருநிகழ் வாலேவாசும்
புதுமொழி யொன்றைப்பேசிப்
புலம்பினார் மகிழ்ச்சிமிஞ்சி

**- வளரும் -**




பத்திரிகைகளில் வரும் செய்திகளைத் தவிர மக்களைக் கவரும் வேறு சில அம்சங்களில் காட்டூன்கள் (கருத்துச் சித்திரம்), விளம்பரங்கள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. சொல்லவந்த விடயத்தை காட்டூன்கள் வார்த்தைகளின்றியே சொல்லிவிடும் வல்லமை கொண்டவை.

தொலைக்காட்சி விளம்பரங்களும் சில நொடிகளில் அப்படியே கருத்துகளை வெளியிட்டு, மக்களின் மனதில் பதிந்துவிடுகின்றன. இல்லாவிட்டால் அதற்கு அர்த்தம், பயன் என்பன கிடைக்காது. ஆனால் விளம்பரங்கள் உண்மையைச் சொல்கின்றனவா...? உண்மையயை மிகைப்படுத்திச் சொன்னால் பரவாயில்லை; பொய்யை உண்மையென்று சொல்ல வருவதுதான் பிரச்சினை. படித்தவர்கள் ஏமாறும்போது பாமர மக்கள் பாவம்! என்ன செய்வார்கள்?

இலங்கை பிரபல பால்மா விற்பனை நிறுவனமொன்று; சுமார் இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன் அது இறக்குமதி செய்த பால்மாவில் கதிரியக்கம் காணப்பட்டமையால் துறைமுகத்தில் வைத்து பால்மா பொதிகள் திருப்பியனுப்பப்பட்டன. (அக்காலகட்டத்தில் செர்நோபில் அணுஉலை விபத்து இடம்பெற்றிருந்தது. கதிர்வீச்சு அயல்நாடுகளுக்கும் பரவி மேய்ச்சல் தரைகளில் படிந்திருந்தமையால் அதைச் சாப்பிட்ட பசுக்களின் பாலிலும் கதிர்வீச்சுப் பாதிப்பு காணப்பட்டது) அதன் பின்னர் அந்த நிறுவன பால்மா விற்பனை மிகவும் நலிவடைந்து காணப்பட்டது. அண்மைக் காலங்களில் மீண்டும் வளர்ச்சிப்போக்கு ஏற்பட்ட வேளையில், கடந்த வருடம் தனது பால்மா வகைகளில் விளம்பரத்தில் பல்வேறு வகையான ஊட்டச் சத்துக்கள் இப்பதாகக் குறிப்பிட்டு அமர்க்களப்படுத்திமிருந்தது.

எனினும் ஓர் அமைப்பு அதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அவ்விளம்பரத்தில் குறிப்பிட்ட ஊட்டச்சத்துகள் அப்பால்மாவில் இல்லை என்று நிருபணம் செய்தது. எனவே, அப்பிரமாண்டமான பால்மா சந்தைப்படுத்தும் நிறுவனத்திற்கு தண்டம் விதிக்கப்பட்டது. அது வெறும் பத்தாயிரம் ரூபாய்தான். இச்செய்திகள் பத்திரிகைகளில் வராமல் கவனமாகத் தவிர்க்கப்பட்டன. ஒரேயொரு தேசிய தமிழ் நாளிதழ்-மட்டும் ஒரு மூலையில் குட்டிச் செய்தியாய்ப் போட்டிருந்தது.

தமது விமான சேவையில் 'கூரியர்' நிறுவனமொன்று ஓரளவு பெரிய பொதிகளையும்





தாம் ஏற்றுக்கொள்வதாக விளம்பரம் செய்தது. அதற்காக குட்டியானை ஒன்று பொதிகளைச் சுமந்துகொண்டு பறப்பது போன்று அழகான விளம்பரமொன்றை தொலைக்காட்சிகளில் சுமார் பத்து வருடங்களுக்கு முன் வெளியிட்டது.

இதைப் பார்த்த பாலர் வகுப்புப் பிள்ளையொன்று தன் மனதில் தவறான கருத்துப்பதிவொன்றை ஏற்படுத்திக் கொண்டுவிட்டது போலும். பாலர் பாடசாலை ஆசிரியை அப்பிள்ளையிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்.

"பறக்கும் உயிரினங்கள் சில சொல்லுங்க..." பிள்ளை சொன்னது "கிளி, புறா, யானை"

சில நிறுவனங்கள் தம் பொருட்கள் பற்றிக் குறிப்பிட்ட கால இடைவெளியின் பின் விளம்பரம் செய்கின்றன. அதிலிருந்து இரண்டு விடயங்கள் தெரியவரும். ஒன்று: சந்தையில் அப்பொருட்களின் விற்பனை வீழ்ச்சியடைகின்றன. அதனை நிமிர்த்தி விடுவதற்கான முயற்சி. அடுத்து: அப்பொருட்களின் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்திவிட்டார்கள் என்பது.

சில தொலைக்காட்சி விளம்பரங்கள், விளம்பரம் என்பதற்கப்பால் கலைநயம் மிக்கனவாயும் காணப்படுகின்றன. அவற்றிலொன்று பிரபல பால்மா நிறுவனமொன்றுக்கான 'சுருள் தலைமுடிக் குழந்தையொன்றின்' விளம்பரம். இவ்வாறு இன்னும் சில விளம்பரங்களையும் குறிப்பிடலாம். என்றாலும் அவை பற்றி பட்டியலிடுவது இங்கு அழகாக இருக்காது. அவ்விளம்பரங்கள் பற்றி நாம் விளம்பரம் செய்வது போலாகிவிடும்.

காட்டூன் என்று சொன்னதும் எனக்கு ஞாபகம் வருவது 'மதன்' அவர்கள்தான். அவரின் காட்டூன்கள் சிரிப்பூட்டுபவையாகவும் இருக்கும், கருத்தூட்டுபவையாகவும் இருக்கும். அவரின் கருத்து 'காட்டூனிஸ்ட் உருவாவதில்லை; பிறக்கின்றான்'

அவர் 'காட்டூனிஸ்ட்' பற்றி ஓர் இடத்தில் இவ்வாறு சொல்கிறார். 'காட்டூனிஸ்ட் முழுமையானவன். நாளிதழ்களையெல்லாம் படித்து முடித்துவிட்டு இன்றைக்கு முக்கியமான நிகழ்ச்சி என்ன? எதை வைத்து காட்டூன் போடலாம் என்பதைத் தேர்ந்தெடுப்பதும் அவன்தான். அப்புறம் எந்தவகை உருவகம் பயன்படுத்தலாம் என்று யோசிப்பதும் காட்டூனிஸ்ட்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ்நாட்டில் தமாஷாகப் படம் வரையும் திறமையுள்ளவர்களில் சிலர்கூட காட்டூனிஸ்டாக மாறவில்லை. ஆசிரியர்குழு உட்கார்ந்துகொண்டு ஒரு ஐடியாவை யோசித்து இப்படிப் போடலாம் என்று ஓவியரிடம் சொல்லிப் படம் போடச் சொல்வதுதான் தமிழ்நாட்டில் அதிகம். இப்படிப் போடுவது காட்டூனே இல்லை"

சிந்திக்கவேண்டிய விடயந்தான். இலங்கையில் அமரர் எஸ்.இராமச்சந்திரன் (சாணக்கியன்-சந்துரு) நல்ல தமிழ்க் காட்டூனிஸ்டாக இருந்தவர்.



# இன்றைய தமிழ் இலக்கியங்களை சர்வதேசமயப்படுத்த வேண்டும்

## சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் தமிழ்நேசன் அடிகளார்

உலக இலக்கிய அரங்கிலே இன்றைய தமிழ் இலக்கியங்களின் இடம் என்ன? என்ற கேள்வி முக்கியமானது. உலக மொழிகளின் வரிசையில் இன்று தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றுள்ளது. பல்வேறு நாட்டு எழுத்தாளர்களுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆண்டுதோறும் கிடைத்துவரும் நிலையில் தமிழ் இலக்கியத்திற்கு ஏன் இதுவரை நோபல் பரிசு கிடைக்கவில்லை? என்ற கேள்வியும் இங்கு முக்கியமானது. இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை நாம் இன்னும் சர்வதேசத்தின் பார்வைக்கு வைக்கவில்லை. இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை நாம் இன்னும் சர்வதேசமயப்படுத்தவில்லை. எனவே, இந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு அதற்கான உந்துதலை, ஏதுநிலையை ஏற்படுத்த வேண்டும்.

தமிழை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசென்ற முயற்சியில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் பங்களிப்பு காத்திரமானது. சமயப் பணிபுரிவதற்காக கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் தமிழ் மண்ணிற்கு வந்தபோது சமய நோக்கங்களுக்காகவே தமிழை அவர்கள் படிக்க ஆரம்பித்தனர். தமிழை அவர்கள் கற்க ஆரம்பித்தபோது தமிழின் அழகிலும் ஆழத்திலும் அவர்கள் தம்மைப் பறிகொடுத்தனர். அவர்களில் சிலர் வந்த வேலையை விட்டுவிட்டு தமிழை ஆழமாகக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றனர். தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட தமிழின் சில இலக்கியங்களை மேலைத்தேச மொழிகளில் மொழிபெயர்த்தனர். தமிழ் மொழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர். இதன்வாயிலாக மேலைநாட்டவர்கள் தமிழின் தொன்மையை, அதன் மேன்மையை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. சர்வதேச இலக்கியத் தளத்தில் தமிழ் மொழியின் சிறப்பு உணரப்பட்டது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றவர்களில்





ரவீந்திரநாத் தாகூர்

மிகவும் முக்கியமானவர். தமிழ் இலக்கியங்களின் பழமையையும் வளமையையும் செழுமையையும் பல்வேறு நாடுகளின் உலகப் பல்கலைக்கழகங்களில் அவர் எடுத்து விளக்கினார். பன்மொழிப் பாண்டித்தியம் பெற்ற அவர் ஒவ்வொரு நாட்டிற்கும் சென்றபோது அந்தந்த நாட்டு மொழியில் தமிழ் இலக்கியங்களையும் தமிழின் பண்பாட்டுப் பெருமைகளையும் எடுத்துக் கூறினார்.

தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில், ஒரு குக்கிராமத்தில் இருந்துகொண்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - அதாவது 'எல்லா ஊரும் என்னுடைய ஊரே, எல்லா மக்களும் என்னுடைய உறவினரே' என்று கூறிய சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் உலகளாவிய சகோதரத்துவ வார்த்தைகளை தனிநாயகம் அடிகளார் உலக அரங்கில் அந்தந்த நாட்டு மொழிகளில் சொன்னபோது மேலை நாட்டவர்களின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் உலகளாவிய ரீதியில் சிந்தித்தானா?! என்று வியந்து நின்றனர்.

தமிழின் செம்மொழித் தகுதியை உலகம் ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதற்கு தனிநாயகம் அடிகள் போன்ற பன்மொழி தமிழ் அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களை சர்வதேச அரங்கின் பார்வைக்கு முன்வைத்தமையும் முக்கிய காரணமாகும். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் பெருமையில்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவு நனவாகும்போதுதான் உலக அரங்கில் தமிழ் இலக்கியங்கள் கவனத்தைப் பெறுகின்ற நிலை உருவாகும்.

இந்தியாவின் வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியிலேயே எழுதிக்கொண்டிருக்கும்வரை அவருடைய எழுத்துகள் உலகத்தின் கவனத்தைப் பெறவில்லை. எப்பொழுது அவர் தனது 'கீதாஞ்சலி' என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டாரோ அப்போதுதான் அவருடைய இலக்கியங்கள் உலகின் கவனத்தை ஈர்த்தன. பல ஆங்கிலக் கவிஞர்களின் பார்வை அவர்பால் திரும்பியது. அவருக்கு நோபல் பரிசு கிடைக்கின்ற ஏதுநிலை தோன்றியது.

இன்று படைக்கப்படுகின்ற தமிழ் இலக்கியங்கள் உலகத்தின் கவனத்தைப் பெறவேண்டுமெனில் அவை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். ஆங்கிலம் மற்றும் ஏனைய முக்கிய ஐரோப்பிய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்படவேண்டும். இதை இன்று யார் செய்வது? என்ற கேள்வி எழுவது இயல்பானது. அன்று கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் செய்ததை, அண்மைக் காலகட்டத்தில் தனிநாயகம் அடிகள் போன்ற பன்மொழி அறிஞர்கள் செய்ததை இன்று செய்யக்கூடியவர்கள் யார் என்றால் அவர்கள்தான் இன்றை புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய தமிழர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இன்று தாம் வாழும் நாடுகளின் மொழிகளில் கல்வி பயின்று அம்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ளனர். தமிழையும் நன்கு கற்றிருக்கக்கூடிய இந்த இளம் சந்ததியினரே இதைச் செய்ய வேண்டும். அதாவது இவர்கள் இன்றைய சமகால தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து தமிழ் இலக்கியங்களின் ஆழத்தையும் அகலத்தையும் உலக அரங்கில் முன்னிலைப்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழ் இலக்கியத்திற்கும் நோபல் பரிசு கிடைக்கின்ற காலம் கனியும்.




இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக கல்வித்துறையில் சாதனை படைத்த ஒரு இளைஞனைச் சந்தித்தோம். க.பொ.த உயர்தரப் பிரிவில் உயிரியல் துறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் ஆறாம் இடத்தையும் பெற்றுக்கொண்ட செல்வன். விக்னேஸ்வரா சஞ்சீவ் அவர்களையே நாம் இம்முறை வாசகர்களுக்கு அறிமுகஞ் செய்யவுள்ளோம்.

அண்மையில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் சாதனையாளர் பாராட்டு விழாவொன்று இடம்பெற்றது. இவ்விழாவில் க.பொ.த உயர்தர உயிரியல், கணித, வர்த்தகப் பிரிவுகளில் அதியுயர் தரங்களைப் பெற்றவர்களும் க.பொ.த சாதாரணதரப் பிரிவில் ஒன்பது பாடங்களிலும் A தரம் பெற்ற 15 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். அதில் மருத்துவத்துறைக்குத் தெரிவாகிய ஒன்பது மாணவர்களும் பொறியியல் துறைக்குத் தெரிவுசெய்யப்பட்ட 7 மாணவர்கள் உட்பட 19 மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பிரிவில் பாராட்டுப் பெற்றனர்.

இதில் வி.சஞ்சீவ் தேசிய ரீதியில் 6ம் இடத்தையும் செல்வன் சிவலிங்கம் பிரசாந் தேசிய ரீதியில் 24ம் இடத்தையும் (மாவட்ட ரீதியில் 2ம் இடம்) பெற்று மருத்துவத் துறைக்குத் தெரிவானார்கள்.

செல்வன் விக்னேஸ்வரா சஞ்சீவ் அவர்களின் தகப்பனார் திரு.கே.விக்னேஸ்வரா அவர்கள் ஒரு புகழ்பூத்த ஆங்கில ஆசிரியர். தாயார் திருமதி. ருத்ரேஸ்வரி அவர்கள் தாதிய உத்தியோகத்தராவார்.

சஞ்சீவ் அவர்கள் நாவற்குடாவைச் சேர்ந்தவர்கள். 1991ம் ஆண்டு செப்டம்பர் 18ம் திகதி பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் தன் கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

அவரிடம் உங்கள் க.பொ.த (சா.த) பெறுபேறுகள் என்னவென்று கேட்டபோது அடக்கமாக பத்து Aக்கள் என்றார். க.பொ.த (சா.த) பரீட்சையில் அதிகம் சாதித்த மாணவர்களில் கணிசமான தொகையினர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாதிப்பது சற்றுக் குறைவாகக் காணப்படுகின்ற நிலையில்



இவரின் சாதனை பாராட்டப்படக்கூடியதுதான்.

"நீங்கள் பாடசாலைக் கல்வியைத் தவிர பிரத்தியேகக் கல்வியிலும் கவனம் செலுத்தினீர்களா?" என்று நாம் வினவினோம். அதற்கு அவர் பதிலளிக்கையில் "பாடசாலையில் நாம் குறிப்பிட்ட 6 மணித்தியாலங்கள் மட்டுமே கற்கின்றோம். பாடசாலை நமக்கு பூரணமான பாடத்திட்டம், செய்முறைப் பரீட்சைகள் என்பனவற்றையும் குறிப்பிட்ட அளவிலான வினாவிடைகள் என்பனவற்றையும் எமக்கு ஊட்டுகிறது. ஏனைய மீதி நேரங்களில் மாணவராகிய எமது கடும் உழைப்புத்தான் எமக்கு உறுதுணை. அதற்குத் தனியார் வகுப்புகளும் எமக்கு உதவி புரிகின்றன" என்றார்.

பௌதிகவியல் பாடத்தை இரண்டு ஆசிரியர்களிடமும், ஏனைய இரண்டு பாடங்களையும் தலா ஒவ்வொரு ஆசிரியரிடமும் பிரத்தியேகமாகப் பெற்றுக்கொண்டதாகவும் அவர் கூறுகிறார். கற்றலில் அவர் கைக்கொண்ட உத்திகள் பற்றி வினவியபோது அதற்கு எளிமையாகப் பதிலளித்தார்.

"அன்றன்றைய பாடங்களை அன்றன்றே கற்கவேண்டும். ஒவ்வொரு அலகையும் கற்று முடித்தபின் அவற்றைத் திரும்பத் திரும்ப பலமுறை கற்கவேண்டும். அதன் பின்னர் அப்பகுதி தொடர்பான கடந்தகால வினாவிடைகளை மீட்டுப் பார்க்கவேண்டும். நான் இருபது வருடத்திற்கான கடந்தகால வினாவிடைகளைக் கற்றேன்"

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதற்கு செலவிடும் நேரம் பற்றி அவரிடம் கேட்டபோது சாப்பிடும் வேளையும் செய்திகள் சொல்லும்போதும் மட்டுமே தொலைக்காட்சி பார்த்ததாகக் குறிப்பிடுகின்றார்.

க.பொ.த (உ.த) என்பது தடைதாண்டும் போட்டிப் பரீட்சையாகக் காணப்படுவதனால் வேறு எதற்கும் செலவிட நேரம் இருக்காது. படிப்பே முக்கியம் என்று கூறும் சஞ்சீவ், பரீட்சைக்கு ஆறு மாதங்கள் இருக்கும்போது செல்லிடத் தொலைபேசி பாவிப்பதையும் தவிர்த்துவிட்டதாகக் கூறுகின்றார். அப்போது அவருடன் வந்திருந்த சஞ்சீவின் பெரியதாயாரின் மகன் (அவரும் 2A, Bயுடன் மருத்துவத் துறைக்குத் தெரிவாகியுள்ளார்) குறிப்பிடுகையில் தனக்கு பரீட்சைப் பெறுபேறுகள் வந்த பின்னர்தான் செல்லிடத் தொலைபேசி வாங்கித் தரப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

"உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்னவாக இருந்தது?' என்று சஞ்சீவிடம் கேட்டபோது "வைத்தியராவது" என்று குறிப்பிட்டார். "அதன் பின்னர். ." என்றபோது "ஏதாவது ஒரு துறையில் விசேட நிபுணராவது" என்று கண்களில் ஆர்வம் பொங்கக் கூறினார்.


கல்வியுடன் ஏனைய புறக் கிருத்தியங்களும் (விளையாட்டு, சாரணர் இயக்கம் போன்றன) இணையும்போதுதான் பிள்ளை சமநிலை ஆளுமை பெறுவான் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் பற்றி சஞ்சீவிடம் வினவியபோது அதற்கு அவர், தனக்கு அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

பரீட்சை மண்டபத்திற்குச் செல்லும் வரையில் ஒருவித படபடப்பு இருந்ததாகவும் வினாத்தாளை செய்யத் தொடங்கியவுடன் எல்லாம் இலகுவாகக் காணப்பட்டதாகவும் அவர் 'தொண்டனுக்குத்' தெரிவித்தார்.

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழிகட்கு உதாரணமான செல்வன். வி. சஞ்சீவ் அவர்களைப் பாராட்டி, வாழ்த்தி விடைபெற்றுக்கொண்டோம்.

**- ஆழியோன்**



# ஜப்பான்

சுனாமியால்
ஜப்பான்
சுடுகாடானது!

பொருளாதாரத்தின்
முதுகெலும்பு
உடைந்து
பொடிப்பொடியானது!

தொழில்நுட்பத் தேசம்
தொலைந்து விட்டது

பூகம்பம் என்பதே
ஜப்பானுக்கும்
பொழுதுபோக்குத்தான்
ஆனால் இப்போது
அந்தத் தேசத்தையே அது
மண்ணுக்குள்
புதைத்துவிட்டது!

நவநாகரீக உலகம்
சுமையானது
இனி அதன் சரித்திரம்
சாம்பல்தான்!

விஞ்ஞானத்தின்
சக்தியால்
அடுத்த கிரகங்களையும்
விழுங்கத் துடிக்கும்
மனிதா!
புரிந்துகொள்
இயற்கை முன்
நீ ஒரு புல்

உலகின் அழிவுக்கு
இது ஒரு ஆரம்பம்
முடிவு
மிக கோரமாக இருக்கும்

இந்த அழிவுக்கு
மனிதா
எந்த உயிரும் காரணம் அல்ல
எல்லாம் நீதான்
சிந்தித்துப் பார்
இனி உன்னால்
என்ன செய்யமுடியும்?

இன்றைய உலகம்
இயற்கையின் எதிரி
அதனால்தான்
இந்த யுத்தம்
இதில் மனிதன்
எப்படி வெல்லுவான்?

இயற்கைதான்
மகாசக்தி
இதன்முன்
எந்த விஞ்ஞானமும்
எடுபடாது!

- வாக்கருவாணன் -




## உரோமைக் கலாபனைகள்

முதல் மூன்று நூற்றாண்டிலும் திருச்சபையானது உரோமை முழுவதும் மிகவும் துரிதமாய் வளர்ச்சியடைந்தது. கிறிஸ்தவர்களின் தொகை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே சென்றது. கிறிஸ்தவர்களின் செயல்களால் புறவினத்தவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டனர். கிறிஸ்தவமல்லாத பல புறவினத்தவ மதங்கள், வழிபாட்டு முறைகள் பேரரசினுள் நுழைந்தன. இதனால் உரோமையர்கள் இப்புதுமதங்கள் மட்டில் சகிப்புத்தன்மை உடையவர்களாய் இருந்தனர். இவர்களில் பலர் இப்புதுமதங்களைப் பின்பற்றியும் இருந்தனர். இதனால் சிலவேளைகளில் இவர்களுக்கும் யூதர்களுக்குமிடையில் சில பிரச்சினைகள் தோன்றின.

ஆனால், கிறிஸ்தவர்கள் மட்டில் உரோமையர்கள் கொண்டிருந்த மனப்பான்மை முற்றிலும் எதிர்மாறானது. அவர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்ததுமல்லாமல் சந்தேகத்துடனேயே நோக்கினர். இதற்கான காரணம் கிறிஸ்தவர்களின் மனப்பான்மையும், அவர்கள் நடந்துகொண்ட விதமுமாகும். கிறிஸ்தவர்கள் தங்கள் மதமே உண்மையான மதம் என்று உரோமையரை, புறவினத்தவரை இழிவாகக் கருதினார்கள். அவர்களின் வழிபாடுகள், சிலை வழிபாடுகள், அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் வெறுத்தனர். தாங்களே உண்மையான கடவுளை வழிபடுபவர்கள் எனவும், அவர்களின் கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும் வாதாடினர். மேலும் உரோமயரைப் பாவிகள் எனவும் வெறுத்து ஒதுக்கினர். இத்தகைய கிறிஸ்தவர்களின் போக்கு உரோமையரைக் கோபத்திற்கு உள்ளாக்கியது. அவர்களின் கலாசாரம், பண்பாடு, பேரரசு முழுவதற்கும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இவ்வாறு இயேசுவை மெசியாவாக ஏற்று யூத மதத்தை விட்டுப் பிரிந்து சென்ற யூதக் கிறிஸ்தவர்களைப் பொறுக்கமுடியாத யூதர்களும் உரோமையரின் இக்கோப நெருப்புக்கு எண்ணெயை ஊற்றினர். இவ்வாறாக வெளியுலகில் இருந்து தனிமையாகி கிறிஸ்தவர்கள் இரவில் தமது வழிபாடுகளை மறைவான இடங்களில் நடாத்தியமை பல்வகையான எதிர்ப்புகளையும் பாதிப்புகளையும் கொண்டு வந்தது.

இவ்வாறாக கிறிஸ்தவர்களுக்கும் உரோமையர்களுக்கும் இடையே நாளுக்கு நாள் வெறுப்பும் சந்தேகமும் வளர்ந்துகொண்டே சென்றது. இவ்வாறு உரோமைய ஒழுக்க நிலைப்பாட்டிற்கும், பொதுநலனுக்கும் ஆபத்தாய் இருந்த வேளையில் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. முதலாம் நூற்றாண்டில் இதுவே உரோமையப் பேரரசின் கொள்கையாகவிருந்தது.

கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உரோமையர்களுக்கு எரிச்சலை மூட்டியது. உரோமையப் பேரரசுக்கும், கடவுளர்களுக்கும் தூபம் காட்டவும். பலி ஒப்புக்கொடுக்கவும், ஆராதிக்கவும் மறுத்ததால் கிறிஸ்தவர்கள் மனுக்குலத்தின் விரோதிகள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டனர். இயற்கையில் இடம்பெறும் அழிவுகள், நோய்கள் அனைத்திற்கும் கிறிஸ்தவர்களே காரணம் எனக் குற்றஞ் சாட்டப்பட்டனர். இவ்வாறாக முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் உரோமையரால் கிறிஸ்தவர்கள் முகங் கொடுத்த

கலாபனைகளில் பத்து மிகக் கொடூரமானதாய் இருந்தன. அவை:

- முதலாவது: கி.பி 64-65 நீரோவினாலும்
- இரண்டாவது: கி.பி 95-96 தொமிசியனாலும்
- மூன்றாவது: கி.பி 106-117 திராஜனினாலும்
- நான்காவது: கி.பி 161-180 மாற்கு அவுரேலியனாலும்
- ஐந்தாவது: கி.பி 202-211செப்திமுஸ் செவரஸினாலும்
- ஆறாவது: கி.பி 235-238 மாக்சிமின் திராசியனாலும்
- ஏழாவது: கி.பி 249-251 திசியூசினாலும்
- எட்டாவது: கி.பி 257-260 வலேரியனினாலும்
- ஒன்பதாவது: கி.பி 274-275 அவுரேலியனினாலும்
- பத்தாவது: கி.பி 303-305 தியோக்கிளேசியனினாலும் இடம்பெற்றது.

இவற்றில் பத்தாவது கலாபனையில் அதிகம் வேதசாட்சிகள் இறந்தனர். இவ்வாறாக கிறிஸ்தவர்கள் நாளுக்கு நாள் இறக்க, திருச்சபை துரிதமாய் வளர்ச்சியடைந்தே சென்றது. இது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஆணிவேராய் அமைந்தது. இத்தகைய "மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக" அமைந்தது. இக்கலாபனைக் காலங்களில் பேரரசின் வெளியில் அமைதி நிலவியது. பாரசீகம், ஆர்மேனியா, அபிசினியா, பித்தினியா, நாசியான், கப்பதோக்கியா, கொன்ஸ்தாந்துநோபிள் போன்ற கீழைத்தேய நாடுகளிலும் திருச்சபை மென்மேலும் வளர்ச்சியடைந்தது. இது திருச்சபையின் முழுமையான வளர்ச்சிப் போக்கினைக் காட்டுகிறது.

## கடுகுக் கதை 32 ஏசப்பாவும் இங்கிலீசும்

அன்ரன் தன் கடைசி மகன் பற்றி நன்கு யோசித்தார். அவன் படிப்பில் கெட்டிக்காரன். ஆனால் பரீட்சை எழுதுவதில் 'பதகளிப்பு' உடையவன். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். மகனைக் கூப்பிட்டுச் சொன்னார்.

"மகனே! சோதனை எழுத ஆரம்பிக்கும்போது ஏசப்பாவை மன்றாடித்து எழுதுங்க..."

"எப்பிடி மன்றாடுறது..?"

"ஏசப்பா... நான் சோதின எழுதல்ல... நீங்கதான் எழுதித் தரணும்... ஆமென்!"

முதலாம் தவணைப் பரீட்சை தொடங்கிவிட்டது. புள்ளிகளும் வரத்தொடங்கிவிட்டன.

கணிதம் - 100 புள்ளி
தமிழ் - 97 புள்ளி

அன்ரன் மகனிடம் கேட்டார் "இங்கிலிஸ் மாக்ஸ் என்ன மகன்?" அவன் தன்



தகப்பனாரிடம் நிதானமாகச் சொன்னான்.

"அப்பா! நம்மட ஏசப்பா இங்கிலிசல வீக். எண்பத்தெட்டுத்தான்"

"அன்ரனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை"

- பற்றி



# மன அழுத்தங்களும் அவற்றைச் சீரமைக்கும் சில சிந்தனைகளும்

மனித வாழ்க்கை என்பது சுகமான, சுமூகமான நீரோடையல்ல, பல்வேறு சவால்களின் போராட்டக் களமும் கூட. தானாக ஒதுங்கிப் போனாலும், வம்பு தானாகத் தேடிவந்து மனதைக் குழப்பி மனஅழுத்தத்தில் தள்ளிவிடுகின்றது. வாழ்க்கை, பல்வேறுபட்ட மனித உணர்வுகள், பல்வேறுபட்ட சமூகச் சூழல், கட்டுப்பாடுகள், கலாசாரங்கள், பண்பாடுகள், பாரம்பரிய சமூக அமைப்புகள், குடும்ப எதிர்பார்ப்புகள், சமயக் கோட்பாடுகள் என்பவற்றிற்கு முகங்கொடுத்தே நகர்த்தப்படவேண்டியுள்ளது. இவ்விக்கட்டான சூழலில் பொறாமைக்காரரின் பழிவாங்குணர்வுகள், பிறர் முன்னேற்றங்களையும், நன்மதிப்பையும் குழிதோண்டிப் புதைக்க எடுக்கும் பிரயத்தனங்கள், பிறரைப் பற்றிச் சோதிக்கும் ஆவலாதி அவதூறுகள் போன்றவை ஒருபக்கம் மனஅழுத்தத்தை பன்மடங்கு அதிகரித்துவிடுகிறது.

மறுபக்கம் கல்வி பயில்வோர்க்கு பாடச் சுமைகள் - பெற்றோரின் போட்டியான எதிர்பார்க்கைகளின் தேவையற்ற அழுத்தங்கள் மாணவர்கள் மேல் திணிக்கப்படல், ஆசிரியர்களது கட்டளைகள், எதிர்பார்க்கைகள், சமூகப் போட்டிகள், இவை மாணவர்களது மன அழுத்தத்தைத் தூண்டி விடுகின்றன.

பரீட்சைக் களத்தில் போராடித் தோற்றுப்போவோருமுண்டு பல்கலைக்கழகம் செல்வோரும் உண்டு. பல்கலைக்கழகம் செல்வோர் பல்வேறுபட்ட சமூகத்தில் வருவோருடன் இணைந்து தனித்து நின்று முகங் கொடுத்து சமூகச் சவால்களை எதிர்நோக்கவேண்டும். அங்கும் இளமையின் உணர்வுகளுடனும், குடும்ப எதிர்பார்க்கை போட்டிபோட சமூகச் சவால்களைச் சமாளித்துக்கொண்டு படிக்கட்டுகளைத் தாண்டவேண்டும். பரீட்சையிற் கோட்டை விட்டோர் மாற்றுவழிகளைத் தேடி அலையவேண்டும்.

சரி போராடிப் போராடி தொழில் ஒன்றைத்

தேடிக்கொண்ட பின் அங்கும் சவால்கள் மன அழுத்தங்களை மென்மேலும் அதிகரிக்க, மேலும் போட்டிகள்தான். பொருளாதாரச் சவால்கள், நாகரீக மாற்றங்கள், சமூக மாற்றங்கள், சுற்றுச் சூழல் மாற்றங்கள் இவற்றின் மத்தியில் - சமூக ஏற்றத்தாழ்வுகள் மத்தியில் காதல் திருமணமா? பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணமா? மனஉணர்ச்சிகளின் மத்தியில் வக்கிரமான போராட்டம், மன அழுத்தங்கள் இன்னோர் கோணத்தில் போர்க்கொடி தூக்க, தவிப்புநிலை, சங்கடமான மனநிலை, யாரை யார் திருப்திப்படுத்துவது? பெற்றோரையா? காதலியையா? வாக்குறுதிகளும் எதிர்பார்க்கைகளும் முட்டிமோதிச் சிதறும் சீரற்றநிலை. முடிவெடுப்பதில் முரண்பாடுகள், மனஉழைச்சல், வாழ்க்கையில் தேவையற்ற வெறுப்புநிலை, நிம்மதியற்ற போக்கு, யாருக்காக எப்படி வாழ்வது? யார் யாரைத் திருப்திப்படுத்துவது என்ற போராட்டம்.

பெற்றோரின் பெற்றகடன் தீர்ப்பதா? உணர்வுகள் பட்டகடன் தீர்ப்பதா? முரணான முடிவுகளுடன் இல்லற வாழ்வில் இணைவதா? கட்டுப்பாடுகளை உடைத்து, உற்றார் உறவினரின் பாசக்கயிற்றை அறுப்பதா? வேடக்காரனாக அவர்கள் பின் செல்வதா? மனஅழுத்தம் மகாவதையாக மண்டியிட வாழ்க்கை மேலும் மேலும் சிக்கலாகும் சீரற்ற நிலை. பின்பு ஏதோ ஒரு பக்கம் தலை சாய்த்தாலும் மனப்போராட்டம், ஒரு சாராரை ஏமாற்றிவிட்ட குற்ற உணர்வு. நிம்மதியற்ற சூழல் மனதை ஒரு வழிப்பாதையில் வழிநடத்தினாலும் பிள்ளைகள் வளர அவர்களது தேவைகள், விருப்பங்கள், அபிலாசைகள், போட்டிகள் இவ்வாறு மன அழுத்தங்கள் பல கோணங்களில் படையெடுக்க, வயதும் படிப்படியாக விடைபெறும் நிலையில் நோய் மெதுமெதுவாக வந்து ஒட்டிக்கொள்கிறது. வாழ்க்கையின் சரிவுக் கட்டம் தலைதூக்கும்போது விரக்தியும் வெறுப்பும் மன அழுத்தத்தை இன்னோர் கோணத்தில் வாரிப் போட்டுக்கொள்கிறது. சவால்களும் சம்பிரதாயங்களும் மனிதவாழ்வில் தொடர்ந்து மன அழுத்தங்களை விதைத்தவண்ணமே இருக்கும். உறவுகளால், நண்பர்களால், நடமாடும் இடங்களால், தொழில் பார்க்கும் இடங்களால், பிள்ளைகளால் மன அழுத்தங்கள் மாறி மாறி வந்தவண்ணமே இருக்கும். நிம்மதியை நாடி மனம் பதகளிக்கும்.

## மன அழுத்தத்தைப் போக்க பல வழிகள்...

- முற்றுமுழுதாக இறைவனை ஒருமனதாக நம்புங்கள். அடிக்கடி செபியுங்கள். இறைவன் பாதத்தில் உங்கள் மனப்பாரத்தைத் தூக்கி வையுங்கள்.
- உளவள ஆலோசகரைச் சந்தித்து உரையாடுங்கள்.
- நம்பிக்கையான நண்பர்களுடன் உரையாடுங்கள்.
- கடற்கரைக்குச் சென்று பரந்து விரிந்து கிடக்கும் கடலையும் விண்ணையும் நன்றாக நோக்கி இறைவனை அமைதியாக அணுகுங்கள்.
- உடற்பயிற்சிக்கும், யோகாப்பியாசத்திற்கும் நேரம் ஒதுக்குங்கள்.
- எதிலும் திட்டமிட்டுச் செயற்படுங்கள்.
- பேராசையைக் கைவிடுங்கள்.
- மற்றவர்மீது பொறாமைப்படுவதை நிறுத்துங்கள்.
- மற்றவர்களது முன்னேற்றங்களைக் கண்டு எரிச்சலடையாது ஏற்கவும் வாழ்த்தவும் பழகுங்கள்.
- பழிவாங்கும் உணர்வைப் பொசுக்குங்கள்.
- ஆவலாதி, அவதூறு பேசுவதை நிறுத்துங்கள்.
- முன்னேற முயற்சி எடுங்கள்.
- வாசிப்பதில் இன்பங் காணுங்கள்.
- கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுங்கள்.
- இசையை இரசியுங்கள்.
- மரங்களை வளர்த்து மகிழுங்கள்.
- செல்லப்பிராணிகளுடன் மகிழுங்கள்.
- பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் வளருங்கள்.

• எதிர்பார்க்கைகளைக் குறைத்துவிட்டு சுயமுறச்சியால் முன்னேறுங்கள்.

• எல்லாம் மனிதனுக்கே. எமக்கு மட்டுமல்ல கவலைகள், துன்பங்கள் எல்லா ஜீவராசிகளுக்குமே என்பதை உணருங்கள்.

• எதிலும் குறைகாண்பவன் மனிதன் என்ற உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள்.

• பிறர் குறைகளை அளக்குமுன்பு உங்கள் குறைகளை அளவுங்கள்.

- வயலற் சந்திரசேகரம் -

ஒருவன் பெரியவன் எனும்போது, அது அவனுடைய வாழ்க்கையை அளக்கும் அளவுகோல் என்று அர்த்தமாவதில்லை. மாறாக அது அவனது வாழ்க்கையின் தரத்தை, தன் வாழ்வை எப்படி வாழ்கின்றான் என்பதை எடுத்தியம்புகிறது என்றே கொள்ளப்படவேண்டும்.

# எண்ணிப் பார்க்கையில்...

# யார் பெரியவன்?



உண்மையில் ஒருவனைப் பெரியவன் என்று சொல்லும்போது அவன் எந்தெந்தப் பணிகளை அல்லது எத்தனை பணிகளை ஆற்றுகின்றான் என்பதனாலல்ல, மாறாக அவன் ஆற்றும் பணிகளை எத்துணை தரமானதாக, எவ்வளவு மேலானதாக ஆற்றுகின்றான் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.
எண்ணிப்பார்க்கும்போது, நம்மிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை, நாம் பொறுப்பேற்கும் பணிகளை, நம்மிடம் வந்துசேருகின்ற பணிகளை, நாம் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்புடனும், முனைப்புடனும், சிறப்புடனும் ஆற்றுகின்றோம் என்பதைக் கொண்டே நாம் பெரும் மனிதர்களாகக் கருதப்படுகின்றோம் என்பதை எம்மனதிற் கொண்டு உழைப்பது அவசியமானதாகின்றது.
போதுமான நேரம் கொடுத்தலும், செய்கின்ற பணியைத் தெரிந்து, தெளிந்து செய்வதும், எமது ஆற்றலை முழுவதுமாய் பிரயோகித்தலும், அர்ப்பணிப்புடன் செயற்படுதலும் நமது பணிகளில் நமக்கு உயர்வைத் தேடித்தரும்; நம்மைப் பெரியவர்கள் வரிசையில் கொண்டும் சேர்க்கும். அப்படிப்பட்ட காரியங்களும், பணிகளும்தான் ஒன்று இரண்டல்ல பலநூறு ஆண்டுகள் நிலைத்து நிற்கின்றன. அதனால் அப்பணி செய்தவர் புகழும் அந்த அளவுக்கு நிலைபெறவும் செய்கின்றது.

- ஆனந்தா ஏஜீ.இராஜேந்திரம்

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய

# தமிழியல் விருது - 2010



கவிஞர் நிலாதமிழின்தாசன்



தேவ. அலோசியஸ்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் நடாத்திய தமிழியல் விருது - 2010 விழாவில் பல துறைகளிலும் பங்களிப்புச் செய்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 27ம் திகதி மட். அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற இவ்விழாவில் உயர் தமிழியல் விருது, தமிழியல் வித்தகர், குழந்தை இலக்கியம், விடலை இலக்கியம், கவிதை, காவியம், சிறுகதை, நாவல், நாடகம், நாட்டுக்கூத்து, மொழிபெயர்ப்பு, வரலாறு, ஆய்வியல், அறிவியல், பழந்தமிழ் இலக்கியம், இன நல்லுறவு இலக்கியம், குறும்படம், ஓவியம்/வடிவமைப்பு, பதிப்பகம் ஆகிய பதினாறு துறைகளில் பங்களிப்புச் செய்த படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இவற்றில் 'காவியம்' என்ற பிரிவில் 'நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்' என்ற நூலை எழுதிய கவிஞர் நிலாதமிழின்தாசன் விருது பெற்றார். இக்காவியம் 1980களின் நடுப்பகுதியில் ஓராண்டாகத் தொண்டனில் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றதாகும். கவிஞர் நூலின் முன்னுரையில் கூறியிருப்பதுபோல் நூலாக வெளியிட முயன்றும் முடியாமல் போனது. ஆயினும் இப்போது நூலாக வெளிவந்து விருதும் கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியையும் நிறைவையும் தருகிறது. கவிஞருக்கு எமது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

ஓசை நயம் மிக்க கவிதைகளை யாப்பமைதியுடன் எழுதுவதில் கவிஞர் நிலாதமிழின்தாசன் திறமை மிக்கவர். நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போரின்போது மக்கள் அனுபவித்த தாங்கொணா வேதனைகளையும் துன்பங்களையும் அவலங்களையும் கோபாவேசத்தோடு அவர் கவிதைகளில் வெளிப்படுத்துகையில் அவை நெருப்புத்துண்டங்களாக வந்து விழுவதுண்டு. அதைப் பிரசுரிக்க அவ்வப்போது நாம் தயங்கியதுமுண்டு. அசை கெடாது ஓசைநயம் மிக்க கவிதைகளை வடிக்கும் அவரை இலங்கையின் மூத்த கவிஞர்களான சில்லையூர் செல்வராசன் போன்றோர் சுத்தமான கவிதைக்குச் சொந்தக்காரர் என்று எம்மிடம் பாராட்டியதுண்டு. இதுவரை நான்கு கவிதை நூல்களை வெளியிட்டுள்ள இவர் அனைத்திலங்கை ரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் இருபதுக்கும் மேற்பட்ட பரிசில்களைப் பெற்றுள்ளார்.

மேலும், இவ்விழாவில் குறும்படத்துக்கான விருது இரு படங்களுக்கு வழங்கப்பட்டது. அவை கிழக்குவானம் மற்றையது பள்ளிக்கூடம். கிழக்குவானம் குறும்படத்தை உருவாக்கி இயக்கியவர் தேவ.அலோசியஸ். வாகரையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வதிவது மட்டக்களப்பில். ஆசிரியராக, நாடக எழுத்தாளராக, நடிகராக, பயிற்றுவிப்பாளராக, இயக்குனராக, இலக்கிய மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவராக பல்துறைப் பங்களிப்புச் செய்துவரும் இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாகும் 'புதிய உலகம்' கத்தோலிக்க நிகழ்ச்சிக்குப் பல நாடகங்களை, சித்திரங்களை தயாரித்து வழங்கி வருபவர். பல்வேறு நாடகப் போட்டிகளில் பங்குகொண்டு மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலும், தேசிய அளவிலும் தொடர்ந்து பரிசுகளை வென்று சாதனை படைத்தவர். தேசிய அளவில் வழங்கப்படும் தேசிய இளைஞர் சேவையின் விருது 1999 முதல் 2001 வரை சிறந்த தயாரிப்பாளர் (தொடர்ந்து மூன்று ஆண்டுகள்), சிறந்த இயக்குனர் (தொடர்ந்து இரண்டு ஆண்டுகள்), சிறந்த கதைவசனம் (தொடர்ந்து இரண்டு ஆண்டுகள்), சிறந்த துணைநடிகர், சிறந்த நடிகர், சிறந்த தொலைக்காட்சி நாடகம், சிறந்த வில்லுப்பாட்டு, சிறந்த நகைச்சுவை நாடகத் தயாரிப்பாளர் என நாடகத்துறையில் இவரிடம் காணப்பட்ட பலவித ஆற்றல்களுக்காக வழங்கப்பட்டது.

தற்போது சிறந்த குறும்படத் தயாரிப்பாளருக்கான விருதை 26 நிமிடங்களைக் கொண்ட கிழக்குவானம் குறும்படத்துக்காகப் பெற்றுள்ள இவரையும் விருதுகள் பெற்ற அனைவரையும் பாராட்டுவதோடு நமது கலைஞர்கள் மேலும் வளர்ந்து சாதனை புரிய வாழ்த்துகிறோம்.

**- மலர்**

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 05 - 2011




# விவிலியம் கற்போம் - 97

(எண்ணிக்கை 32:1–19)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ரூபன் புதல்வருக்கும் காத்துப் புதல்வருக்கும் ஆடு, மாடுகள் பெருந்திரளாயிருந்தன; அவர்கள் யாசேர் நாட்டையும், கிலயாது நாட்டையும் கண்டனர்; அந்த இடம் ஆடு, மாடுகளுக்கேற்றதாக இருந்தது. எனவே அவர்கள் மோசே, குரு ................................., மக்கள் கூட்டமைப்பின் தலைவர்கள் ஆகியோரிடம் வந்து, அற்றரோத்து, தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலயாலே, செபாம், நெபோ, பெயோன் ஆகிய பகுதிகள் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் பார்வையில் ................................ அடக்கிய நிலப் பகுதிகள் ஆடு, மாடுகளுக்கு ஏற்றவை; உம் அடியார்களுக்கு ஆடு மாடுகள் உண்டு என்றனர். மேலும் அவர்கள், "உங்கள் பார்வையில் எங்களுக்குத் தயை கிடைத்தால் இந்த நாடு உம் அடியார்களுக்கு ............................. தரப்படட்டும்; எங்களை யோர்தானுக்கு அப்பால் கொண்டு செல்ல வேண்டாம்" என்றனர். ஆனால் மோசே காத்துப் புதல்வரிடமும் ரூபன் புதல்வரிடமும் கூறியது; நீங்கள் இங்கு உட்கார்ந்திருக்க உங்கள் சகோதரர் மட்டும் ...................................... போக வேண்டுமா? ஆண்டவர் தங்களுக்குக் கொடுத்த நாட்டுக்குள் செல்லாதபடி ஏன் இஸ்ரயேல் மக்களின் நெஞ்சம் துணிவிழக்கச் செய்கிறீர்கள்? அவர்கள் நாட்டைப் பார்ப்பதற்குக் ........................................ இருந்து நான் உங்கள் மூதாதையரை அனுப்பியபோது அவர்களும் இவ்வாறே செய்தனர். அவர்கள் எசுக்கோல் பள்ளத்தாக்கினுள் சென்று நாட்டைக் கண்டபோது ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்த நாட்டுக்குள் செல்லாதபடி .............................. மக்களின் நெஞ்சம் துணிவிழக்கச் செய்தனர். அந்நாளில் ஆண்டவருக்குச் சினம் மூண்டது; அவர் தம் மேல் ஆணையிட்டுக் கூறியது; எகிப்திலிருந்து வெளிவந்தவர்களில் இருபதோ, அதற்கு மேலோ வயதுடைய ஒருவரும் நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குக் கொடுப்பதாக ஆணையிட்டுக் கூறியநாட்டினைக் காணமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் என்னை முழுமையாகப் பின்பற்றவில்லை. ............................... புதல்வன் காலேபும், நூனின் புதல்வன் யோசுவாவும் இதற்கு விதிவிலக்கு; ஏனெனில் அவர்கள் ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றியுள்ளனர். அத்துடன் ஆண்டவரின் சினம் இஸ்ரயேலுக்கு எதிராக மூண்டது; அவர் இப்பாலை நிலத்தில் நாற்பது ஆண்டுகள் அவர்களை அலையச் செய்தார்; ஆண்டவர் பார்வையில் தீயன செய்த தலைமுறை அனைத்தும் அழியுமட்டும் இது நடந்தது. இப்போதும் நீங்கள் உங்கள் ......................... பதிலாகப் பாவ மனிதராக எழும்பிவிட்டீர்கள். இஸ்ரயேலுக்கு எதிராக உள்ள ஆண்டவரின் கோபக் கனலை இன்னும் கடுமையாக்கி விடுகிறீர்களே! அவரைப் பின்பற்றுவதைவிட்டு நீங்கள் விலகினால் அவரும் அவர்களைப் பாலைநிலத்தில் விட்டு விடுவார்; இம்மக்கள் அனைவரையும் நீங்கள் அழியப் பண்ணுவீர்கள். அவர்கள் அவரிடம் நெருங்கி, "நாங்கள் இங்கே எங்கள் மந்தைகளுக்குப் பட்டிகளையும், தொழுவங்களையும், எங்கள் பிள்ளைகளுக்கு ...................................... கட்டுவோம்; இஸ்ரயேல் மக்களை அவர்கள் இடத்திற்குக் கொண்டு சேர்க்குமளவும் அவர்கள் முன்பாக நாங்கள் போர்க்கலம் தாங்கிச் செல்ல ஆயத்தமாயிருப்போம்; எங்கள் பிள்ளைகள் இந்நாட்டுக் குடிகளிலிருந்து தங்களைப் பாதுகாக்க அரண் சூழ் நகர்களில் வாழ்வார்கள்; இஸ்ரயேல் மக்களில் ஒவ்வொருவரும் தம் ........................................ உடைமையாக்கும்வரை நாங்கள் வீடு திரும்ப மாட்டோம். நாம் யோர்தானுக்கு அக்கரையிலும் அதற்கப்பாலும் அவர்களுடன் எதையும் உடைமையாக்கிக் கொள்வோம். ஏனெனில் எங்கள் உரிமைச் சொத்து கிழக்கே யோர்தானுக்கு இக்கரையில் கிடைத்துள்ளது" என்றார்கள்.

**விடைகள் :** **போருக்கு, இஸ்ரயேல், எபுன்னேயின், மூதாதையருக்கு, உரிமைச் சொத்தை, எலயாசர், நகர்களையும், காதேசுபர்னேயாவில், உடைமையாக, ஆண்டவர்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 97

**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்
   (எல்லாளன், காசியப்பன், சங்கிலியன்)

2. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது எனக் கண்டறிந்தவர்.
   (எடிசன், கலிலியோ, ஆர்க்கிமிடிஸ்)

3. சூரியனிலிருந்து பூமி ..................................................
   (2வது கோள், 5வது கோள், 3வது கோள்)

4. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவலை எழுதிய தமிழ் எழுத்தாளர்
   (ஜெயகாந்தன், அகிலன், புதுமைப்பித்தன்)

5. மடியில் கனமிருந்தால் ..................................................
   (மனது படபடக்கும், வழியில் பயமிருக்கும், உடலில் களைப்பிருக்கும்)

6. 'உண்கின்ற பழம்' என்பது
   (வினையெச்சம், முற்றெச்சம், பெயரெச்சம்)

பெயர் : ..................................................

முகவரி : ..................................................


..................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 97**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................

கொழும்பு தமிழ் சங்கம்
நூலகம்



# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 95 விடைகள்

போருக்கு, எலயாசர், பிலயாமையும், நகர்களையும், எிக்கோவுக்கு, மோசே, ஆண் குழந்தைகளையும், வெளியே, ஆண்டவர், ஏழாம்

## அறிவை வளர்ப்போம் - 95 விடைகள்

1) வீரமாமுனிவர் 2) ஐசெக் நியூட்டன் 3) நிமோனியா
4) வில்லோ மரம் 5) தசையாடும் 6) ஏவல்வினைமுற்று

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 300/= பரிசு பெறுவோர்

- கார்மல் லக்ஷிக்கா லக்ஸ்மன்
  33, பிரதான வீதி,
  திருகோணமலை
- இராமன் ரொசாந்தினி
  முருகன் கோயில் வீதி
  சவுக்கடி, தன்னாமுனை

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்

- W. அலன் ஸ்ரெலா
  40, புகையிரத நிலைய வீதி
  கொட்டகலை
- K. ஷப்திகா
  8ம் குறுக்கு, திராய்மடு
  மட்டக்களப்பு

பாராட்டுப் பெறுபவர்: R. வெனிஸ்டா ரொசைரோ, பன்சாலை வீதி, கல்முனை

சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 46 முடிவுகள்

- **முதலாம் பரிசு** - 400/=
  K. ஷெரின்
  நீதிமன்ற வீதி
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 300/=
  S. விஸ்மிதா
  பாலையூற்று
  திருகோணமலை
- **3ம் பரிசு** - 200/=
  வி. ஒமேகா
  ஆனந்தபுரி
  திருகோணமலை

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## மே - 2011

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி**

| | | |
|---|---|---|
| நாள்: 07, 08, 09, 10<br>21, 22, 23, 24 | | அருள்தந்தை தமிழ்நேசன் |
| 11, 12, 13 | – | அருள்தந்தை மொறாயஸ் |
| 25, 26, 27 | – | அருள்தந்தை ஜூலியன் |

**சிறுவர் உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 03, 17, 31

கதையும் கருத்தும், கவிதை, துணுக்குகள்,
செபம், பாடல்கள் இன்னும்...

**புதிய உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 01, 15, 29

விவிலிய வழிபாடு, வேரைத் தேடி, திருச்சபைச் செய்திகள்,
நாடகம், சிந்தனை உரை, பாடல்கள் இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

---

சனி, ஞாயிறு தினங்களில்: செபம், கத்தோலிக்க நற்சிந்தனை
சக்தி FM, காலை 5.30 மணி
வழங்குபவர்: அருட்தந்தை ஞொஹான் பேணாட்

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு.

நூலகம்